**ஜே.ஆர். ஜெயவர்தன நிலையம் - 2023**
---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜே.ஆர். ஜெயவர்தன நிலையத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிரி நிலையத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ன எனவும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய சேமிப்பு வங்கியலும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கியிலும் பேணிச் செல்கின்ற 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 292,790 மற்றும் ரூபா 246,815 ஆன இரண்டு சேமிப்புக் கணக்கின் மீதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் குறுங்கால முதலீட்டின் கீழ் முன்வைக்கப்பட்டிருந்தது. | தவறுதலாகப் இந்த சேமிப்புக் கணக்கு நிலுவைகள் குறுகிய கால முதலீடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகவும், எதிர்காலத்தில் காசு மற்றும் காசுக்கு சமமான வற்றின் கீழ் வழங்குவதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையத்தினால் 2022 ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்ட குறைந்து செல்லும் மீதி முறைமை அடிப்படையில் பெறுமான தேய்வு செய்யும் முறை பின்பற்றப்பட்டிருந்த போதும் கணக்கிட்டு கொள்கை ஒன்று ஒன்றாக மாற்றும்போது வெளிப்படுத்தப்பட வேண்டிய இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 34(அ) முதல் (இ) வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நிலையான சொத்துக்களை பெறுமானத் தேய்வு செய்யும் செய்யும் கொள்கையை குறைந்து செல்லும் மீதி முறைக்கு மாற்றுவது தொடர்பான வெளிப்படுத்தல்கள் 2024 கணக்குகள் கூற்றும் மூலம் சமர்ப்பதற்கு கீழ் குறிபத்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | :இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் நிலையத்துக்கு சொந்தமான 2023 திசெம்பர் 31 இல் முழுமையாக பெறுமான தேய்வு செய்யப்பட்ட ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் இன் முழு பெறுமதி வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது 2023 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்குப் பிரிவுக்கு கிடைக்கா மையால் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள 2023.12.31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை இனம் காண்பதற்கு முடியாமையால் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 2023.12.31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இன்னும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக அறிக்கை இடுவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செத்திறனான ஆயுட்காலத்தை மிகைத்து தொடர்ந்து பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள்: முகப்புப் பெறுமதியை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | :இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நன்கொடையாக நிலையத்துக்கு கிடைத்திருந்த புத்தகங்கள் உட்பட 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபாய் 3,288,420 ஆன விற்பதற்கு வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் இருப்பின் பெறுமதி கணக்கிடப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை மேலும் கணக்காய்வில் முன்வைக்கப்பட்ட உப பதிவேடுகளின் பிரகாரம் | நூலகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள புத்தகத்தின் பெறுமதி கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு உள்ளது. எதிர்காலத்தில் கணக்கு ஆய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதிக்கு கணக்கிடுவதற்கும் அதனை இலங்கை கணக்கிட்டு நியமம் 07 47(அ) பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கும் குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நியமத்தின் நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நன்கொடையாக கிடைத்த புத்தகங்கள் உட்பட ரூபா 17,704 ஆன புத்தகங்களின் அளவு கிரயத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் புத்தகம் ஒன்றின் கிரயம் தீர்மானிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் நிறுவனத்தின் ஊழியர் பணிக்கொடை நன்மைகளை கணிப்பிடும்போது ஆயுட் கணிப்பீடு நலன் முறை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,496,157 தொகையான பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கீட்டின் போது ஆயுட் கணிப்பீடு நலன் முறை படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஊழியர் நலன் கடற்பாட்டை கணக்கீடு செய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஆயட ்கணிப்பேட்டை முறைமைகளை பயன்படுத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் கொள்கைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரிக்கும் போது இனங காணப்பட்ட முன்னைய ஆண்டுகளின் பெறுமானத் தேய்வை கணக்கீடு செய்யும் போது மேற்கொள்ளப்பட்ட தவறுகளை திருத்தும் போது மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமான தேய்வுக கொள்கைக்காக சீராக்கங்களை மேற்கொள்ளும் போது இனங்காணப்பட்ட குறை பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டை சரி செய்வதற்காக ரூபா 27,148,788 திரண்ட இலாபத்தில் இருந்தும் திரட்டிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு கணக்கின் மூலமும் சீராக்கப்பட்டு இருந்தது எவ்வாறாயினும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய பின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கிரயத்துக்கு இடையே முகப்பு பெறுமதி சேர்க்கப்படாத கிரயமும் | ஜே.ஆர். ஜெயவர்தன நிலையத்திற்காக ஆரம்பத்தில் இருந்தே நிலையான சொத்துக்கள் பதிவேடு என்று இல்லாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது நிறுவனம் ஆரம்ப முதல் பயன்படுத்தப்பட்ட மற்றும் கொள்வனவு செய்யப்பட்டவை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் பதிவுகள் ஒன்று தயாரிக்கும் போது கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டெழும் செலவினம் தன்மையிலான செலவினங்களும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. அதற்காக தேவையான சீறாக்கங்கள் | ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | இயலளவு பெறுமதி சேர்க்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 27,148,788 ஆன பெறுமானத் தேய்வினை சீராக்கம் மற்றும் மீளாய்வாண்டின் ரூபா 4,056,798 ஆன பெறுமானத்தேய்வு செலவினம் (கற்பனை சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு தவிர) சரியானதல்ல என அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மூலம் மேற்கொள்வதற்கு குறித்து கொண்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ஏனைய செலவினம் ரூபா 15,951,802 ஆக இருந்த போதும் அதற்குரிய 24 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 16,451,802 ஆக இருந்ததால் ரூபா 500,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஏனைய செலவினங்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 15,951,802 ஆன செலவினம் சரியானதாகும். எனினும் 24 ஆம் இலக்க குறிப்பினை தயாரிக்கும் போது தவறுதலாக நூலக புத்தகங்கள் அச்சிடல் செலவினமாக ரூபா 500,000 ஆன செலவினம் ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளதால் 24 ஆம் இலக்க குறிப்பில் மொத்தம் ரூபா 16,451,802 ஆக குறிப்பிட்ட உள்ளது. நூலக புத்தகங்கள் அச்சீட்டுக்காக மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் ரூபா 500,000 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. எனினும் காசேட்டிலும் பேரேட்டுக் கணக்குகளிலும் அவ்வாறான செலவினமொன்று உள்ளடக்கப்படவில்லை. இது 24 ஆம் இலக்க குறிப்பை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறு ஒன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி பதிவுகளுடன் ஒப்பிட்டு சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நிதி கூற்றுத் தொகுதியில் குறிப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 05 உருப்படிகளில் ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கையின் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 425,765 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கணக்கீட்டு குறிப்பில் 2022 ஆம் ஆண்டுக்குரிய தகவல்களை பதிவு செய்யும் போது தவறுதாலக கணக்குப் பதிவில் மாத்திரம் ரூபா | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 425,765/= கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது எதிர்காலத்தில் கணக்கு குறிப்புகளை தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட கூடாத போதும் முன்னைய ஆண்டின் சீராக்கமாக திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்ட ரூபாய் 456,667 ஆன மீதி காசு பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது திரண்ட இலாபத்துக்கு செய்யப்பட்ட சீராக்கத்தை சரியாக சீராக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததுது. | காசு பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அரச அடமான மற்றும் முதலீட்டு வங்கியில் காணப்பட்ட 18 நிலையான வைப்புக்களுக்குரிய மீளாய்வாண்டிற்காண வட்டி வருமானமாக ரூபா 22,996,351 தொகை நிதி கூற்றுகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வின் போது கணிப்பிடலின் பிரகாரம் ரூபா 23,342,094 ஆக இருந்ததால் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 345,743 குறைத்து செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காவினால் குறிப்பிடப்பட்டுள்ள 05 நிலையான வாய்ப்புகளுக்காக 2023 ஆம் ஆண்டுக்குரிய (மீளாய்வாண்டுக்குரிய) வட்டி தொகை 21,375,239.46 ஆகும் குறித்த வட்டி தொகை 2023 ஆம் ஆண்டின் வட்டி வருமான கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது அவ்வாறே நிதி கூற்றுக்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு தயவுடன் அறியத் தருகிறேன். | 18 நிலையான வைப்புகளுக்குரிய வட்டி வருமானம் தொடர்பில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றின் சரியான வட்டி வருமானம் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | நிலையத்தினால் 1998 ஆம் ஆண்டில் ஜே ஆர் ஜெயவர்த்தன நிலையம் என்ற பெயரில் இணை தனியார் கம்பெனி ஒன்றுக்கு ரூபா 5,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கம்பெனி 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்தது. முதலீட்டுத் தொகையில் ரூபா 700,000 மாத்திரம் மீளக் கிடைத்திருந்ததுடன் மேற்படி கம்பெனி மூடப்பட்டு 15 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் தீர்வையாகாமல் இருந்த ரூபா | கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்துடன் அப்போதைய கட்டுப்பாட்டு சபை அங்கத்தவராக இருந்த திரு.பிரதீப் ஜெயவர்த்தனம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட J.R.Jayewardene Information centre 2008 ஆம் ஆண்டின் போது வங்குரோத்து நிலைமையால் மூடப்பட்டது | சரியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4,300,000 தொகை தொடர்பான தேவையான கணக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதன் காரணமாக உரிய நிறுவனத்திடம் இருந்து இத்தொகை அல்லது அதற்காக கிடைக்க வேண்டிய பங்கிலாபத்தை பெற்றுக் கொள்ளும் இயலுமைஇருந்ததால் நிதி நிலைமை கூற்றில் நீண்டகால முதலீட்டிலி உள்ளடக்கப்பட்டது J.R.Jayewardene Information Centre முதலீடு செய்யப்பட்ட ரூபாய் 4,300,000 தொகையை நீண்டகால முதலீட்டில் இருந்து ஆற்றுவதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இம் முதலீட்டு கணக்கின் மூலம் அகற்றுவதற்காக பொதுத் திறைசேரியால் புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவலர்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | ஊழியர் இறுதியாக பெற்றுக் கொண்ட சம்பளத்தில் அரை பங்கு சேவை காலத்தால் பெறுக்கப்பட்டு பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் சேவை கால கணிப்பீட்டின் போது முழு ஆண்டுகளுக்காக மாத்திரம் அல்லாமல் சேவை புரிந்த மாதங்கள் கணக்கிடப்பட்டு பணிக்கொடை கணிப்பீடு செய்த காரணத்தினால் நிலையத்தின் 22 ஊழியர்களுக்காக 2023 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 234,897 தொகை கூடுதலாக கணிப்பிடப்பட்டிருந்தது. | கணக்காவினால் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பணிக்கடை ஒதுக்கீடு கணக்கீடு செய்யும் போது ஊழியர்களின் சேவை காலத்தை கணக்கிடும் போது தவறுதலாக சேவை புரிந்த மாதங்களின் எண்ணிக்கைக்கும் பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எதிர்காலத்தில்இதற்காக தேவையான சீறாக்கங்களை மேற்கொள்ள குறித்துக் கொண்டுள்ளதாக. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நிலையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட முதல் 2022 ஆம் ஆண்டு வரை நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணி செல்லப்படாத இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த | ஜே.ஆர். ஜெயவர்தன நிலையத்திற்கு தொடக்கத்திலிருந்தே நிலையான சொத்துப் பதிவேடு இல்லமல் இருந்ததுடன் மேலும் 2023 | வருமானச் செலவினம் மூலதனமாக்க கூடாது. அத்துடன் திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் கிரயம் என்பவற்றை சீராக்க |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் பின்னைய காலங்களில் செலவிடப்பட்ட கிரயத்தை கணக்கீடு செய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 21 ஆம் பந்திக்கு முரணாக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் கார் ஒன்றுக்குரிய 2015, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போதும் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வேன் ஒன்றிற்குரிய 2016,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் போது சேவை கட்டணங்கள் மற்றும் பட்டரி பொருத்துவதற்காக முறையே செலுத்தப்பட்டிருந்த ரூபா 219,981 மற்றும் ரூபா 266,906 பெறுமதி அவ்வாண்டுகளில் மூலதன மாக்கப்பட்டதன் காரணமாக திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் கிரயம் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | ஆம் ஆண்டின் போது , நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பயன்படுத்தப்பட்ட கொள்வனவுகள் மற்றும் பயன்பா தொடர்பான தகவல்களைச் உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடு 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கும் போது கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவினங்களும் சேர்க்கப்பட்டன. இதற்கான தேவையான சீராக்கங்களை 2024 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட 2 ஆதன வகுப்புகள் வெவ்வோறாக கணக்கீடு செய்யாமல் காணி மற்றும் கட்டிடங்களாக ஒரே வகுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் காணி மற்றும் கட்டிடங்களை வெவ்வேறாக மதிப்பீடு செய்வதற்கும் அவற்றை கணக்கு கூற்றின் மூலம் முன்வைப்பதற்கும் குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிடங்களை வெவ்வேறாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப் படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது நிதியம் | 111,972,301 | விரிவான தகவல் | நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முதல் பொது நிதியமாக ரூபா 111,972,301 நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் 2023.12.31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றிலும் பொது நிதியமாக ரூபா 111,972,301 வரை உள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | விரிவான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொது வைப்புக் கள் | 19,826,503 | பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டு ள்ள | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பேரேட்டுக் கணக்கில் தவறுதலாக மக்கள் வங்கியில் வைப்பு | பேரேட்டு கணக்கில் குறிப்பிடப்பட்ட இலக்கங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நிலையான வைப்பு இலக்கம் மற்றும் மீதி உறுதிப்படுத்தம் கடிதத்தின் இலக்கம் வேறுபட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புக்கள் தொடர்பாக கணக்கு இலக்கமாக 2022 ஆம் ஆண்டின் கணக்கு இலக்கம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | மற்றும் வங்கி உறுதிப்படுத்தலில் குறிப்பிடப்பட்ட இலக்கங்கள் ஒப்பீடு செய்யப்பட்டு நிதி கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | சேதமடைந்த புத்தகங்கள் | 389,235 | பெறுமதி கணக்கிடப்பட்ட அடிப்படை மற்றும் விரிவான பட்டோலைகள் | 2024 ஆம் ஆண்டின் போது விற்பனைக்காக நூலகத்தில் காணப்பட்ட புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சுயாதீன குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அக்கணிபீட்டு சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அக்ணிப்பீட்டு சபை ஊடாக இது தொடர்பான உரிய சீராக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | பெறுமதி கணக்கிடப்பட்ட அடிப்படை மற்றும் விரிவான பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | 371(2)(அ) ஆம் பந்தி | நிதி பிரமாணங்களுக்கு முரணாக, மீளாய்வாண்டில் நிலையத்தின் 3 பிரிவுகளில் பணியாற்றும் 3 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 40,000 சில்லறை காசு கட்டுநிதி வழங்கப்பட்டதுடன். சில்லறை காசு கட்டுநிதி மீண்டும் வழங்கும் போது கணக்கு தீர்ப்பனகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தீர்வு செய்யாதிருக்கையில் மீண்டும் கட்டுநிதி 03 | எதிர்காலத்தில் சில்லறை காசு கட்டுநிதி நிதிப் பிரமாணம் 371 (2) இன் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீள்நிரப்பல் சந்தர்ப்பங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ii) | 2020 ஆகஸ்ட் நவம்பர் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்திய நிதிப் பிரமாணம் 756(6) | 2023 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் பிரசுரிக்கப்பட்ட செயற்பாட்டு கைநூல் | | | |
| (i) | 31 மற்றும் 3 2 ஆம் பந்திகள் | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரி அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தின் போது கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 பிரிவின் பிரகாரம் நிலையத்தினால் வருமான வரிக்காக பதிவு செய்வதற்கோ அல்லது வருமான வரி விலக்கு அளிக்கு பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் 2018/2019,2019/2020,2020/2021,2021/,2022 மறறும் 2022/2023 ஆம் மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக வருமான வரி கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப முதல் இதுவரை வருமானவரி கொடுப்பனவு செய்யப்படாத இருந்தலுடன் நிறுவனம் இலாபம் பெரும் நோக்கில் இயங்கும் நிறுவனம் ஒன்றாகஇல்லாததால் வருமான வரி செலுத்தப்படாமல் இருந்ததுடன் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கும் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அறிவிக்கபப்பட்டிருந்தது. | வருமான வரி கொடுப்பனவிற்காக பதிவு செய்வதற்கு அல்லது வரி விடுவிப்பிற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,875,557 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,491,805 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,383,752 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 10,462,081 ஆல் அதிகரித்தமை மற்றும் மண்டப வாடகை வருமானம் ரூபா 5,324,625 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையத்தலிருந்து விலகிச் சென்ற 03 ஊழியர்களிடமிருந்து 2023 திசெசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 422,868 ஆன கடன் மீதியை 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை இடர் கடன் தொகையை விரைவில் கொடுப்பனவு மசெய்யுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் இடர் கடன் நிலுவையை கொடுப்பனவு செய்வதை தாமதப்படுத்தினால் அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிலையம் அமைந்துள்ள 3 ரூட் 4.47 பேர்ச் அளவிலான காணி, 1988 ஆண்டின் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதும் காணியின் உரித்தை நிலையத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஜே.ஆர் ஜெயவர்த்தன நிலையைத்தின் காணியின் உரித்து 1988 இன் 77 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிலையத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது அத்துடன் இந்த வளவில் அமைந்துள்ள கட்டிடங்கள் தொடர்பாகவும் ஜே.ஆர் ஜெயவர்த்தன நிலையத்தினால் வீரவரிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டு வருவதுடன் உரிய பதிவேடுகள் 05 ஆம் இலக்க பின்னிணைப்பின் கீழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். | சட்டத்தின் மூலம் காணியை கையேற்பினை மேற்கொள்ள முடியாமல் உள்ளதுடன் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கட்டிட வாடகை, வகுப்பறை வாடகை, மின்சார கட்டணங்கள் மற்றும் சுத்திகரிப்பு கட்டணங்கள் மீதி ரூபா 11,604,906 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,197,963 ஆன் மீதி | கணக்காய்வினால் குறிப்பிடப் பட்டுள்ள 5 ஆண்டுகளை விட பழமையான அறவிட வேண்டிய தொகைகள், 2012 மே முதல் மே 2013 வரை முறையான ஒப்பந்தங்களின் கீழ் வழங்கப்பட்ட கட்டிட வளவுகளுக்காக வழங்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய | உடன்படிக்கை பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதும் நிலையத்தினால் இம்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தொகைகளாக இருந்ததுடன்,இந்தத் தொகைகளை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர். ஜயவர்தன சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்ட நிலையத்தின் நிர்வாகக் குழுவை ஒன்று சேர்ப்பதில் உள்ள சிரமம் இருப்பது காரணமாக, 2015, 2017 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிர்வாகக் குழு தலா ஒரு முறை கூடியுள்ளதுடன் . நிலையத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரங்களைக் கொண்ட நிர்வாகக் குழு தொடர்ந்து கூடாமல் இருப்பது நிலையத்தின் தொடர்ந்து இயங்குதல் மற்றும் அன்றாட செயற்பாடுகளை மோசமாகப் பாதிக்கக் கூடியதாக இருப்பதால் சுமார் 25 ஆண்டுகள் பழமையான நிலையச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவு உட்பட மற்றும் தேவையான ஏனைய பிரிவுகளை சரியான நேரத்தில் திருத்தம் செய்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியிருந்த போதும் அந்த நோக்கத்திற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கணக்காய்வினால் குறிப்பிடப் பட்டுள்ள நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை முறையாக நடத்துவதற்கு நிர்வாகக் குழுவைக் கூட்டுவதில் உள்ள நடைமுறைச் சிக்கலுக்கு தீர்வாக, நிறுவனத்திற்கு ஒரு செயல்பாட்டுக் குழுவை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | கால ரீதியில் சட்டத்திச் பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 இன் படி வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் நிர்வாக குழு கூட்டமொன்றை கூட்டி அங்கீகாரலம் பெற்ற பின்னர் கூட்ட குறிப்பு பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டியளுள்ளது. எனவே கூட்டத்தை கூட்டுவதற்கான தாமதமே இதற்கான காரணமாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தினத்தில் ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்ககள கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| வேண்டியிருந்த போதிலும் நிலையத்தினால் 2023 ஆண்டிற்கான கணக்குகள் 2024 ஒக்தோபர் 28 ஆந் திகதி 08 மாத தாமதங்களின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 இன் படி நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆண்டறிக்கை களை பாராளுமன்றத்தில் முன்வைக்க திட்டமொன்ற தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்த தேவைவலயான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங் களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும். |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆவது பிரிவின் பிரகாரம் நிலையம் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் 2023 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு நுடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு அந்த நிறுவனத்தின் நிர்வாக சபையால் உரிய வகையில் நியமிக்கப்பட்ட தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். |

## 4.4 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் பிரகாரம் நிலையத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் 04 காலாண்டுகளுக்காக புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுக் கூட்டங்களுக்காக குறிப்பிட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில் வழங்கப்பட்டது. அதே போல் அந்த குழு கூட்டங்களில் உதவி கணக்காளர் பங்குபற்றினாரென அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். |